# S.C.No.138/2013

Date: 24.04.2024.

PW–42 – சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி:

A1, A3, A5 , A7, A9, A14, A16 to A18 present. A2, A6, A8, A11, A13, A15 are called absent. Petition u.sec.317Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் இந்த வழக்கில் எனது புலன்விசாரணையின் தொடர்ச்சியாக காயமடைந்து மருத்து சிகிச்சையில் இருந்த ஜானகி என்பவருக்கு ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.சுப்ரமணியம் என்பரையும், அதே காயமடைந்தவருக்கு தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் ஜெயபால் என்பவரையும் விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தேன். காயசான்றும் பெற்றேன்.

இந்த வழக்கில் இறந்துபோன ஐந்து நபர்களின் உடல்களின் மீது பிரேதபரிசோதனை மேற்கொண்ட ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையை சேர்ந்த மருத்துவர்கள் ரவிசங்கர், மதியழகன், பானுமதி, சுப்ரமணியம் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தேன். இறந்துபோன நபர்களின் பிரேதபரிசோதனை அறிக்கைகள் பெற்றேன்.

எனது புலன்விசாரணையின் தொடர்ச்சியாக நான் திருச்சி தடய அறிவியல் துறையை சேர்ந்த அறிவியல் அலுவலர் திருமதி.ஜெயா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கைகள் பெற்றேன். பையாலஜிக்கல் அறிக்கை அ.சா.ஆ.97. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண்.1 முதல் 6, 8 முதல் 12, 14, 16, 18, 20, 22 மற்றும் 24 முதல் 33 வரையிலான சொத்துக்களில் ரத்தம் கண்டறியப்பட்டது என்றும், வரிசை எண்கள் 7, 13, 15, 17, 19, 21 மற்றும் 23 ஆகியவற்றில் ரத்தம் கண்டறியப்படவில்லை என்றும் கருத்துரை வழங்கப்பட்டுள்ளது.

ரசாயன பரிசோதனை அறிக்கை(தேதி–21.08.2008) பெற்றேன். அந்த அறிக்கையில் அ.சா.ஆ.97 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு சொத்துக்களில் அயிட்டம் 6 மற்றும் 7 ஆகிய இரண்டும் ஒத்திருக்கிறது என்றும், அதேபோல் அயிட்டம் 12 மற்றும் 13 ஆகியவையும், அயிட்டம் 14 மற்றும் 13 ஆகியவையும், அயிட்டம் 16 மற்றும் 17 ஆகியவையும், அயிட்டம் 18 மற்றும் 19 ஆகியவையும், அயிட்டம் 20 மற்றும் 21 ஆகியவையும், அயிட்டம் 22 மற்றும் 23 ஆகியவையும் ஒத்திருக்கிறது என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை அ.சா.ஆ.98.

குருதியல் அறிக்கை (23.09.2008) பெற்றேன். அந்த அறிக்கையில் அ.சா.ஆ.97 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு சொத்துக்களில் வரிசை எண்கள் 1 முதல் 6, 8 முதல் 12, 14, 16, 18, 20, 22, 24 முதல் 33 ஆகிய சொத்துக்களில் கண்டறியப்பட்ட ரத்தம் மனித ரத்தம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. வரிசை எண்.1, 3, 11, 14, 24 முதல் 27, 29 ஆகிய சொத்துக்களில் கண்டறியப்பட்ட ரத்தம் A வகையை சேர்ந்தது என்றும், வரிசை எண்.8 இல் உள்ளது B வகையை சேர்ந்த ரத்தம் என்றும், வரிசை எண்கள் 12 மற்றும் 33 ஆகியவற்றில் கண்டறியப்பட்டது AB வகையை சேர்ந்த ரத்தம் என்றும், வரிசை எண்கள் 30 மற்றும் 31 ஆகியவற்றில் கண்டறியப்பட்ட ரத்தம் O பிரிவை சேர்ந்தது என்றும் கருத்துரை வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை அ.சா.ஆ.99.

அ.சா.ஆ.95 இன் படி என்னால் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்திற்கு பெறப்பட்ட அறிக்கை (07.07.2008) தேதியிட்டது. அ.சா.ஆ.100.

எனது புலன்விசாரணையின் தொடர்ச்சியாக எனது புலன்விசாரணைக்கு உதவியாக இருந்த ஆன்டிமடம் காவல்நிலைய ஆய்வாளர் திரு.சீனு.ராஜேந்திரன் மற்றும் ஜெயங்கொண்டம் காவல் ஆய்வாளர் திரு.மகாதேவன் ஆகியோர்களையும் விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட மொத்தம் 18 எதிகளில் 2 எதிரிகள் இளம்குற்றவாளிகள் எனவே அவர்களை பொறுத்த குற்றபத்திரிக்கையானது இளவர் நீதிமன்றத்தில் என்னால் தாக்கல்செய்யப்பட்டது. எதிரி பாரதிதாசன் என்பவர்

தொடர்ந்து தலைமறைவாக இருந்து வந்தார்.

அத்துடன் இந்த வழக்கில் எனது புலன்விசாரணையை நிறைவு செய்து மீதமுள்ள 16 எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 147, 120(பி), 307, 302(5 எண்ணிக்கை), 326, 201 உ/இ.302 இ.த.சவின் படி கடந்த 13.08.2008 அன்று ஜெயங்கொண்டம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த இறுதி அறிக்கைக்கு பெரம்பலூர் மாவட்ட அரசு வழக்கறிஞர் அவர்களின் ஒப்புதல் பெற்று தாக்கல் செய்தேன்.

<u>6–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட கொலைகள் ஆனது ஏற்கனவே தேசிங்குபாலன் என்பவர் கொலை செய்யப்பட்டதற்கு பழிவாங்குவதற்காக செய்யப்பட்ட கொலைகள் என்று தான் புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேசிங்குபாலன் கொலை வழக்கில் நான் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். இறுதி அறிக்கை மட்டும் தாக்கல் செய்தேன் என்றும், அந்த வழக்கில் எனக்கு முன்பாக பணிபுரிந்த ஆய்வாளர் அனைத்து சாட்சிகளையும் விசாரித்து வைத்திருந்தார் என்றும் சாட்சி கூறுகிறார்.

இவ்வழக்கின் சாட்சிகளான அ.சா.1 ராஜலிங்கம், அ.சா.3 அமிர்தலிங்கம் ஆகியோர் தேசிங்குபாலன் கொலை வழக்கில் குற்றவாளிகள் என்றால் சரிதான். தேசிங்குபாலன்கொலை வழக்கில் ஜாமீனில் வெளியே வந்த ராஜலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் நிபந்தனை கையெழுத்து வேறு காவல்நிலையத்தில் போட்டு வந்தார்கள் என்றால் சரியல்ல. மீன்சுருட்டி காவல்நிலையத்தில் தான் கையொப்பம் செய்து வந்தார்கள்.

தேசிங்குபாலன் கொலை நடந்ததிலிருந்தே வங்குடி கிராமமானது போலிசாரின் கண்காணிப்பில் இருந்து வந்தது என்றால் சரிதான். மாவட்ட காவல்கண்காணிப்பாளரின் நேரடி கண்காணிப்பில் அக்கிராமம் இருந்து வந்தது என்றால் சரிதான். ஜாமீனில் விடுவிக்கப்பட்ட ராஜலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் நிபந்தனை கையொப்பம் செய்து வந்தபோது வங்குடி கிராமத்தில் தங்கியிருக்கவில்லை என்றாலும், அவர்கள் வெளியூரில் இருந்துவந்து கையொப்பம் செய்து வந்தார்கள் என்றாலும் அதுபற்றி

எனக்கு நினைவில்லை. அவர்கள் இருவரையும் வங்குடி கிராமத்தில் தங்கியிருக்க வேண்டாம் என்று போலிசார் தரப்பில் அறிவுறுத்தியிருந்தோம் என்றால் தங்கியிருக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் தங்கியிருந்தால் பிரச்சனை ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது என்று அறிவுறுத்தியிருந்தோம்.

இவ்வழக்கு சம்பவ காலகட்டத்தில் சாட்சி ராஜலிங்கம் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைகழகத்தில் ஆராய்ச்சி படிப்பு படித்து வந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் சாட்சி அமிர்தலிங்கம் கடலூரில் ஒரு ஜவுளிக்கடையில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். தேசிங்குபாலன் கொலை நடந்ததிற்கு பிறகு வங்குடி கிராமத்தில் போலிஸ் பிக்கடிங் இருந்து வந்தது என்றால் தேசிங்குபாலன் கொலை நடந்தது 21.10.2007 அன்றைய தினத்திலிருந்து சிலமாதங்கள் வரை வங்குடி கிராமத்தில் பிக்கடிங் இருந்தது. ஆனால் இவ்வழக்கு சம்பவ காலகட்டத்தில் போலிஸ் பிக்கடிங் இல்லை.

இவ்வழக்கு சம்பவம் பற்றி கேள்விபட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அன்று காலை 9.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. அவர் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார் என்று நினைவில்லை. காலை 11.00 மணியளவில் வந்திருப்பாரா என்றால் அதற்கு பின்னால் தான் வந்திருப்பார் நேரம் சரியாக தெரியவில்லை. சம்பவம் தொடர்பாக புகாரானது காவல் நிலையத்தில் காலை 11.30 மணிக்கு கொடுக்கப்பட்டது. அந்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்ததிற்கு பின்னிட்டு சுமார் 12.30 மணிக்கு நான் சம்பவ இடம் சென்றேன்.

ஐந்து கொலைகளுக்கும் சேர்த்து நான் ஒரேஒரு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தான் தயார்செய்தேன். என்னால் தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடமானது மொத்தம் எவ்வளவு சதுரடி பரப்பளவு கொண்ட இடத்தை பொறுத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் பரப்பளவினை நான் வரைபடத்தில் குறிப்பிடவில்லை. என்னால் தயார் செய்யப்பட்டுள்ள வரைபடமானது வங்குடி கிராமம் முழுவதையும் உள்ளடக்கி தயார் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சம்பவ இடங்களை மட்டும் உள்ளடக்கி தயார் செய்திருக்கிறேன்.

அந்த வரைபடத்தில் வண்ணாங்குளத்திற்கு போகும் வழியை குறிப்பிட்டு காட்டியிருக்கிறேன் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் பிரபுவின் உடல் கிடந்த இடத்தில் இருந்த ரத்தமானது எவ்வளவு பரப்பளவிற்கு பரவி கிடந்தது என்று நான் சொல்லவில்லை. பார்வை மகஜரிலும் அந்த சங்கதியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தர்மலிங்கத்தின் உடல் கிடந்த இடத்திலும் இருந்த ரத்தமானது எவ்வளவு பரப்பளவிற்கு பரவி கிடந்தது என்று நான் மாதிரி வரைபடத்திலும், பார்வை மகஜரிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் வண்ணாங்குளத்திற்கு குளிக்க சென்ற நபர்கள் தங்களுடன் எடுத்துசென்ற மாற்றுதுணிகள், சோப்பு, உள்ளாடைகள் போன்றவை சம்பவ இடங்களில் சிதறி கிடந்ததாக சொல்லவில்லை என்றாலும், அப்படி சொத்துக்கள் எதனையும் நான் கைப்பற்றவில்லை என்றாலும் சரிதான். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வந்தபோது அங்கு காவல் துணை கண்காணிப்பாளரும் வந்திருப்பார் என்றால் சரிதான்.

மாவட்ட காவல்கண்காணிப்பாளர் சம்பவ இடத்தில் இருந்த நிலையில் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட புலன்விசாரணையை காவல்துணை கண்காணிப்பாளர் எடுக்க மறுத்துவிட்டார் என்று நான் சொல்லுவது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நானே சுயமாக இந்த வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. காவல் துணை கண்காணிப்பாளர் இந்த வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மறுத்துவிட்ட காரணத்தினால் வேறுவழியில்லாமல் நான் இந்த வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

இறந்துபோன 5 நபர்கள் சம்மந்தப்பட்ட பிரேதவிசாரணையானது எத்தனை மணிக்கு முடிவுற்றது என்றால் நான் பிரேதவிசாரணையை 16.15 மணிக்கு நிறைவு செய்தேன். நான் பிரேதவிசாரணை மேற்கொண்ட சுரேஷ், பிரபு ஆகியோர்களது பிரேதங்களை பிரேதபரிசோதனைக்காக ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு போலிசார் மூலம் அனுப்பி வைத்தேன். அதற்கு பிறகு தான் நான் அந்த

மருத்துவமனைக்கு சென்றேன். பிரேத பரிசோதனை முடிவுற்றதிற்கு பின்னிட்டு பிரேதங்கள் நல்லடக்கம் செய்வதற்காக உறவினர்களிடம் அந்தந்த காவலர்களால் ஒப்படைக்கப்பட்டது. மேற்கண்ட 5 பிரேதங்களும் அடக்கம் செய்யப்பட்டபோது வேறு எந்த பிரச்சனையும் வரக்கூடாது என்பதற்காக நாங்களும் அங்கு இருந்தோம்.

பிரேதங்கள் அடக்கம் செய்யப்பட்டபோது இரவு 11.00 மணி இருக்குமா என்றால் இருக்கலாம். காயமடைந்த ஜானகி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களை நான் விசாரித்தேன். அந்த மருத்துவர்களிடம் நான் ஆயுதங்களை காண்பித்து விசாரணை செய்யவில்லை. ஆனால் காயமடைந்தோருக்கு ஏற்பட்ட காயங்கள் என்னவிதமான ஆயுதங்களால் தாக்கினால் ஏற்படக்கூடும் என்பது சம்மந்தமாக விசாரித்திருக்கிறேன்.

6 ஆம் எதிரி ரமேஷ் என்பவர் வங்குடி கிராமத்திலேயே இருக்கமாட்டார் என்றாலும், அவர் வெளியூரில் வேலை செய்து வந்தார் என்றாலும் சரியல்ல. அவர் வெளியூரில் தங்கியிருந்து வேலை பார்த்துக்கொண்டு உள்ளுருக்கும் வந்து சென்றுகொண்டு தான் இருந்தார். 6 ஆம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், அவர் காசிநாதன் குடும்பத்திற்கு எதிர்கோஷ்டியை சேர்ந்தவர்களுடன் இருந்த காரணத்தினால் அவரை பொய்யாக இந்த வழக்கில் குற்றவாளியாக சேர்த்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து 6 ஆம் எதிரி என்னால் கைது செய்யப்படவில்லை என்றாலும், அவர் என்னிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அவர் கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த வழக்கு சொத்துக்களும் என்னால் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

<u>8–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகாரில் 8 ஆம் எதிரி பாஸ்கர் என்பவருக்கும், காசிநாதன் குடும்பத்திற்கும் இடையே முன்விரோதம் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பாக சொல்லப்படவில்லை. ஆனால் இரு பிரிவினராக இருந்ததாக

சொல்லப்பட்டுள்ளது. அ.சா.1 ஒரு அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்றாலும், 8 ஆம் எதிரி வேறொரு அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்றாலும் அந்த அரசியல் முன்விரோதத்தின் காரணமாக 8 ஆம் எதிரியின் பெயரானது புகாரில் அ.சா.1–ஆல் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

அ.சா.15 ஜானகி தொடர்பாக ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகலில் அவர் 35 நபர்களால் தாக்கப்பட்டதாக கூறியதாக மருத்துவரால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோன தர்மலிங்கத்தின் உடலில் என்னென்ன காயங்கள் இருந்தது என்று பார்த்தேனே என்றால் தர்மலிங்கத்தின் உடலின் மீது ஆய்வாளர் மகாதேவன் தான் பிரேத விசாரணை மேற்கொண்டார். எனவே தர்மலிங்கத்தின் உடலில் என்னென்ன காயங்கள் இருந்தது என்று நான் முழுமையாக பார்க்கவில்லை. ஆனால் இறந்தவர்களின் உடல்களை பார்த்தேன்.

தர்மலிங்கத்தின் பிரேத பரிசோதனை அறிக்கையில் அவரது கால்களில் காயங்கள் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் குற்றபத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள நேரத்தில் இவ்வழக்கு சம்பவமானது நடைபெறவில்லை என்றாலும், 16.05.2008 அன்று அதிகாலை நேரத்திலேயே இவ்வழக்கு சம்பவமானது நடைபெற்றுவிட்டது என்றாலும், 8 ஆம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், இறந்துபோன 5 நபர்களும் மற்றும் ஜானகியும் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

சிதம்பரத்திலிருந்து கும்பகோணம் செல்லும் பிராதான சாலையின் மேல் தான் குருவாலப்பன் கோவில் என்ற கிராமத்தில் பேருந்து நிறுத்தம் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. குருவாலப்பன் கோவில் பேருந்து நிறுத்தம் என்ற பகுதியானது மக்கள் நடமாட்டம் உள்ள ஒரு பகுதி என்றால் சரிதான். அ.சா.29 மற்றும் அவரது உதவியாளர் ஆகியோர் அரசு பணியாளர்கள் என்றால் சரிதான்.

24.05.2008 தேதியன்று காலை 9.00 மணியளவில் குருவாலப்பன் கோவில்

கிராம பேருந்து நிறுத்தில் வைத்து அ.சா.29 மற்றும் அவரது உதவியாளர் ஆகியோர்களை சாட்சிகளாக இருக்கும்படி கோரி நான் விண்ணப்பம் எதுவும் கொடுத்தேனா என்றால் வாய்மொழியாக கேட்டுக்கொண்டேன். எழுத்துமூலமான விண்ணப்பம் கொடுக்கவில்லை.

நான் சொன்னது போல் 24.05.2008 தேதியன்று 8 ஆம் எதிரியை நான் குருவாலப்பன்கோவில் பேருந்து நிறுத்ததில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும், அப்படி கைது செய்திருந்தால் பொதுஜன சாட்சிகள் முன்னிலையில் தான் அவரை கைது செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை கைப்பற்றியதற்கும் நான் பொதுஜன சாட்சிகள் யாரையும் சாட்சியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.பொ.20 வழக்கு சொத்தின் கைப்பிடியானது எந்த வகையான கைப்பிடி அதாவது இரும்பால் ஆனதா மரத்தால் ஆனதா என்று கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

அந்த கைப்பிடியில் இரும்பு, வெண்கலம் போன்றவற்றால் பூண் எதாவது போடப்பட்டிருந்ததா என்றும் கைப்பற்றுதல் மகஜரில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த சொத்தானது ஒரு பக்கம் வெட்டக்கூடியதா அல்லது இருபக்கமும் வெட்டக்கூடியதா என்ற விவரமும் அதன் முனையானது எப்படி அமைந்திருந்தது என்ற விவரமும் கைப்பற்றுதல் மகஜரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து நான் 8 ஆம் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், நான் சொன்னதுபோல் 8 ஆம் எதிரி என்னிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த வழக்கு சொத்துக்களும் என்னால் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. 8 ஆம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றாலும், அவர் இவ்வழக்கில் வேண்டுமென்றே சேர்க்கப்பட்டிருக்கிறார் என்றாலும் சரியல்ல.

<u>13–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது முதல் குற்றப்பத்திரிக்கை

தாக்கல் செய்தது வரை நான் தான் புலன்விசாரணை மேற்கொண்டிருக்கிறேன் என்றால் சரிதான். இறந்துபோன சுரேஷ், பிரபு ஆகியோர்கள் பிரேதங்களின் மீது நான் பிரேதவிசாரணை மேற்கொண்ட சமயத்தில் அந்த பிரேதவிசாரணையில் கலந்துகொண்ட சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் 13 ஆம் எதிரி பாரதிதாசன் சம்மந்தமாக எவ்வித தகவலும் சொன்னதாக பிரேத விசாரணை அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

இறந்துபோன மற்ற மூவரது பிரேதவிசாரணை அறிக்கைகளிலும் 13 ஆம் எதிரி சம்மந்தமாக எந்த சங்கதிகளும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இறந்தபோன பிரபு என்பவரது தலை சம்மந்தமாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பிரேதவிசாரணை அறிக்கையில் 9 வது காலத்தில் 16.05.2008 அன்று காலை 10.00 மணிக்கு இருவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டு இறந்துபோன தேசிங்குபாலன் வகையரா கையில் வீச்சருவாள் மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் வந்து காசிநாதன் தரப்பினரை வெட்டியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வழக்கின் புகாரிலோ, அ.சா.1 ராஜலிங்கம் அவரது போலிஸ் வாக்குமூலத்திலோ 13 ஆம் எதிரி பாரதிதாசன் சம்பவ இடத்தில் இருந்ததாகவே, சம்பவத்தில் ஈடுபட்டதாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 13 ஆம் எதிரி அ.சா.1 ன் குடும்பத்தை அழிப்பது சம்மந்தமாக திட்டம் தீட்டியதாக இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பாக என்னால் அ.சா.1–இன் தரப்பில் இருந்து எந்தவொரு எழுத்துமூலமான புகாரும் பெறப்படவில்லை.

வழக்கின் புகாரிலோ, அ.சா.1 ராஜலிங்கம் அவரது போலிஸ் வாக்குமூலத்திலோ 13 ஆம் எதிரி பாரதிதாசன் சம்பவத்திற்கு முன்பு யாருடன் சேர்ந்து எங்கு வைத்து எந்த தேதியில் சதிதிட்டம் தீட்டியதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் நீண்ட நாட்களாக திட்டம் தீட்டியதாக மட்டும் அவரது போலிஸ் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். புகாரில் கடந்த ஒரு மாத காலமாக எதிரி பாரதிதாசன் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து திட்டம் தீட்டியதாக சொல்லப்பட்டுள்ளது.

வழக்கின் புகாரிலும், அ.சா.1 ராஜலிங்கம் அவரது போலிஸ் வாக்குமூலத்திலும் 13 ஆம் எதிரிக்கும் இறந்துபோன நபர்களுக்கும் இடையே விரோதம் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை. 13 ஆம் எதிரி சதிதிட்டம் தீட்டியதாக மட்டும் சொல்லியிருக்கிறார். வழக்கு சம்பவத்தின் போது 13 ஆம் எதிரி சம்பவ இடத்தில் இருந்ததாக என்னால் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் யாராவது அவர்களது போலிஸ் வாக்குமூலங்களில் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை.

அந்த சாட்சிகள் யாரும் என்னுடைய விசாரணையில் 13 ஆம் எதிரிக்கும், இறந்துபோன நபர்களுக்கும் விரோதம் இருந்ததாக சொல்லியிருக்கிறார்களா என்றால் இவ்வழக்கின் எதிரிகளான திருஞானம், பாரதிதாசன் மற்றும் காளிதாஸ் ஆகிய மூவரும் உடன்பிறந்த சகோதரர்கள். சாட்சிகள் திருஞானம் குடும்பத்திற்கும், இறந்துபோன நபர்களுக்கும் விரோதம் இருப்பதாக சொல்லியிருப்பதால் அதில் பாரதிதாசனும் அடக்கம்.

நான் சொன்னதுபோல் திருஞானம் குடும்பத்திற்கும், இறந்துபோன நபர்களுக்கும் இடையே விரோதம் இருந்ததாக எந்த சாட்சியும் என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சாட்சி ஜானகி என்னுடைய விசாரணையில் எந்த தேதியன்று பாரதிதாசன் சதிதிட்டம் தீட்டியதாக சொல்லியிருக்கிறார் என்றால் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் சதிதிட்டம் தீட்டியதாக சொல்லியிருக்கிறார்.

சாட்சி ஜானகி என்னுடைய விசாரணையில் ஊருக்கு அருகே உள்ள சவுக்கு தோப்புக்குள் பேச்சுகுரல் கேட்டதாகவும், அதனை கவனித்து பேசுவதை தெரிந்துகொண்டதாகவும் என்னுடைய விசாரணையில் சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். பாரதிதாசன், 8 ஆம் எதிரி பாஸ்கரன் ஆகியோர் தலைமையில் எதிரிகள் மீட்டிங்போட்டு பேசினார்கள் என்றும் அந்த கூட்டங்கள் எதிரி காளிதாஸ் வீட்டில் நடந்தது என்றும் குறிப்பிட்டு ஜானகி என்னுடைய விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான்.

சாட்சி ஜானகி என்னுடைய விசாரணையில் எங்கள் வீட்டிற்கு எதிர்புறம் தான்

எதிரி காளிதாசன் வீடு உள்ளது என்றும், அவ்வாறு எதிரிகள் மீட்டிங் போட்டு பேசியதை நான் எனது வீட்டிலிருந்து கேட்டிருக்கிறேன் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடப்பதற்கு 5, 6 நாட்களுக்கு முன்பாக எதிரிகள் மீட்டிங் போட்டு பேசியதை தான் கேட்டதாக சாட்சி ஜானகி எனது விசாரணையில் சொல்லவில்லை.

சாட்சி ஜானகி என்னுடைய விசாரணையில் எதிரிகள் மீட்டிங் போட்டு பேசியதை தனது கணவரிடம் மட்டும் சொன்னதாகவும், தனது மகன்களிடம் சொல்லவில்லை என்றும் சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். சாட்சி ஜானகி எதிரிகள் மீட்டிங் போட்டு பேசியதை அ.சா.5 பிரகாஷ் என்பரிடம் சொன்னதாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் காளிதாஸ் வீட்டில் கூட்டம்போட்டு பேசியது சம்மந்தமாக ராஜலிங்கம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவோ அந்த புகாரை காவல்நிலையத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என்றோ சாட்சி ஜானகி எனது விசாரணையில் சொல்லவில்லை.

எதிரி பாரதிதாசனுக்கும், ஜானகி குடும்பத்தினருக்கும் நிலத்தகராறு இருந்ததாக சாட்சி ஜானகி எனது விசாரணையில் சொல்லவில்லை.

அ.சா.20 பாபு எனது விசாரணையில் எதிரி பாரதிதாசன் எந்த தேதியில் சதிதிட்டம் தீட்டினார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 ராஜலிங்கம் எனது விசாரணையில் 13 ஆம் எதிரி பாரதிதாசன் வங்குடி கிராமத்தில் வசித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை. அ.சா.1 ராஜலிங்கம் எனது விசாரணையில் 13 ஆம் எதிரி பாரதிதாசன், எதிரிகள் திருஞானம், காளிதாசன், ரவிசந்திரன், பழனிசாமி, தினேஷ், ஜவகர்பாபு, பாஸ்கரன், சிலம்பரசன், திருவாலப்புத்தூர் ரமேஷ், விஜய், சுரேஷ், கனகவள்ளி, சசிகலா ஆகியோர்களுடன் ஒன்றாக கூடி அ.சா.1 குடும்பத்தை அழிப்பது சம்மந்தமாக பேசினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சம்பவத்தை செய்வதற்கு 13 ஆம் எதிரி தான் சதிதிட்டம் தீட்டி கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளார்.

அ.சா.2 ஜெயந்தி எனது விசாரணையில் அனைத்து பிரச்சனைகளுக்கும் எதிரி பாரதிதாசன் தான் காரணம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் அவ்வாறு

சொல்லவில்லை. ஆனால் அவர் தான் சதிதிட்டம் தீட்டி கொடுத்ததாக சொல்லியிருக்கிறார்.

அ.சா.3 அமிர்தலிங்கம் எனது விசாரணையில் பாரதிதாசன் மற்றும் ரவிசந்திரன் தலைமையில் எதிரிகள் அனைவரும் அடிக்கடி ஒன்றுகூடி தேசிங்குபாலன் இறப்பிற்கு பழிவாங்கவேண்டுமென்று பேசிகொண்டிருந்தார்கள் என்று குறிப்பாக சொல்லவில்லை. சதிதிட்டம் தீட்டியதாக சொல்லியிருக்கிறார். எதிரிகள் அவ்வாறு சதிதிட்டம் தீட்டியது சம்மந்தமாக அக்கம்பக்கம் வசிப்பவர்கள் தன்னிடம் சொன்னதாக அ.சா.3 எனது விசாரணையில் குறிப்பாக சொல்லவில்லை.

அ.சா.3 ன் உறவினர்களான சரோஜா, பக்கத்தில் வசிக்கும் அலெக்சாண்டர், ரகுபதி ஆகியோர் எதிரிகள் சதிதிட்டம் தீட்டியது சம்மந்தமாக தன்னிடம் சொன்னார்கள் என்று அ.சா.3 எனது விசாரணையில் சொல்லவில்லை. பாரதிதாசன் அவரது பூர்வீக வீட்டில் வழக்கு சம்பவத்திற்கு 3 மாதங்களுக்கு முன்பிருந்து அடிக்கடி பேசி திட்டம் தீட்டியதாக அ.சா.3 எனது விசாரணையில் சொல்லவில்லை. எதிரிகள் சதிதிட்டம் தீட்டியதாக சொல்லுவது சம்மந்தமாக அ.சா.3 வழக்கு சம்பவத்திற்கு முன்பாக என்னிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

அ.சா.4 ஜெகதீஸ்வரன் எனது விசாரணையில் எதிரி பாரதிதாசன் சம்மந்தமாக குறிப்பாக எதுவும் சொல்லவில்லை. அந்த சாட்சி வழக்கு சம்பவத்திற்கு 15 தினங்களுக்கு முன்பாக இறந்துபோனவர்களின் குடும்பத்தை பழிவாங்கவேண்டும் என்று பாரதிதாசன் திட்டம் வகுத்தாக எனது விசாரணையில் குறிப்பாக சொல்லவில்லை.

அ.சா.5 பிரகாஷ் எனது விசாரணையில் எதிரி பாரதிதாசன் சம்மந்தமாக குறிப்பாக எதுவும் சொல்லவில்லை. அந்த சாட்சி எனது விசாரணையில் நடந்த சம்பவம் அனைத்திற்கும் எதிரி பாரதிதாசன் தான் காரணம் என்றும், அவர் தான் திட்டம் போட்டு கொடுத்தார் என்றும், ராஜலிங்கத்தின் குடும்பத்தை காலிசெய்யவேண்டுமென்று அவர் திட்டம் போட்டார் என்றும் சொல்லவில்லை. மேற்கண்டவாறு எதிரி பாரதிதாசன் திட்டம் போட்டதை ஊரில் உள்ளவர்களோ அல்லது சாட்சி ஜானகியோ தன்னிடம்

சொன்னதாக அவர் எனது விசாரணையில் சொல்லவில்லை.

அ.சா.6 ஜோதிவேல் எனது விசாரணையில் தேர்தல் சம்மந்தமாக காசிநாதன் குடும்பத்திற்கும், பாரதிதாசனுக்கும் முன் விரோதம் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை. அ.சா.6 எனது விசாரணையில் சம்பவத்தன்று காலை 10.00 மணியளவில் அவர் பூராசாமி பெட்டிகடைக்கு எதிரில் நின்றுகொண்டிருந்தாகத்தான் சொல்லியிருக்கிறார். அவ்வாறு அவர் அந்த இடத்தில் நின்றுகொண்டிருந்தபோது அவருக்கு அருகில் காசிநாதன், தர்மலிங்கம் மற்றும் பாரிவள்ளல் மகன் பிரகாஷ் ஆகியோர் நின்றுகொண்டிருந்ததாக எனது விசாரணையில் சொல்லியிருக்கிறார்.

அ.சா.7 கோபி எனது விசாரணையில் சம்பவத்தன்று சம்பவ இடத்தில் எதிரி பாரதிதாசன் இருந்ததாக சொல்லவில்லை. இந்த வழக்கிற்கும் 13 ஆம் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றாலும், அவர் தான் சம்பவத்திற்குரிய திட்டம் தீட்டிகொடுத்ததாக காட்டுமாறு எந்தவொரு ஆதாரத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

சுரேஷ் என்பவரது பிரேதவிசாரணையானது என்னால் மேற்கொள்ளப்பட்டது. அந்த பிரேதவிசாரணை 16.05.2008 அன்று 15.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 16.00 மணிக்கு முடிக்கப்பட்டதாக அ.சா.ஆ.56 பிரேதவிசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பிரேதவிசாரணை அறிக்கையில் 2 வது தாளில் முதல் பத்தியில் 14.00 மணிக்கு பிரேதவிசாரணை ஆரம்பிக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்று சாட்சி சுயமாக கூறுகிறார். அந்த பிரேத விசாரணையானது 16.00 மணிக்கு முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சுரேசின் பிரேதபரிசோதனையானது மருத்துவரால் 16.05.2008 அன்று ஜெயங்கொண்டம் அரசு மருத்துமனையில் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டதாக பிரேதபரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கு சம்மந்தமாக சரிவர புலன்விசாரணை மேற்கொள்ளாத காரணத்தினால் தான் முன்னுக்கு பின் முரணாக நேரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

இந்த வழக்கிற்கும், 13 ஆம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

<u>3–ஆம் எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகாரில் உள்ள வாசகங்களும், முதல் தகவல் அறிக்கையில் உள்ள வாசகங்களும் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரில் முதல் பக்கத்தில் அனுப்புதல் என்ற இடத்தில் ராஜலிங்கத்தின் பெயருக்கு அருகில் 30/08 என்று அவருடைய வயது குறிப்பிடப்பட்டுள்ள விதத்திலிருந்தே அந்த புகாரானது காவல்துறையை சேர்ந்த ஒருவரால் எழுதப்பட்டுள்ளது நன்கு தெரியவருகிறது என்றால் சரியல்ல.

புகாரின் முதல் பக்கத்தில் கீழ் இருந்து மேலாக நான்காவது வரியில் 16.05.2008 என்ற இடத்தில் மாதத்தை பொறுத்து திருத்தம் இருக்கிறது என்றால் சரிதான். இவ்வழக்கில் என்னையே புலன்விசாரணை மேற்கொள்ள சொல்லி எனது உயர் அதிகாரிகள் எனக்கு எழுத்துமூலமாக உத்தரவு எதுவும் கொடுக்கவில்லை. என்னுடைய முதல் விசாரணையில் நான் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன் என்று குறிப்பாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 12.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன்.

நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்கு கூட்டம் அதிகமாக இருந்ததா என்றால் அதுபற்றி நினைவில்லை. இந்தவழக்கில் சம்பவ இடத்திற்கு அருகில் பெட்டிகடை வைத்திருந்ததாக கூறப்படும் பூராசாமி என்பவரை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்கொண்ட இரண்டு பிரேதவிசாரணைகள் சம்மந்தமாகவும் பஞ்சாயத்தார்களுக்கு நான் முறைப்படி சம்மன் சார்வு செய்யவில்லை என்றால் அப்போது இருந்த சூழ்நிலையில் என்னால் பஞ்சாயத்தார்களுக்கு சம்மன் வழங்கமுடியவில்லை. மேலும் அழைத்தவுடன் சாட்சிகளும், பஞ்சாயத்தார்களும் வந்துவிட்டார்கள். எனவே அவர்களுக்கு நான் சம்மன் சார்வு செய்யவில்லை. சாட்சி பின்னிட்டு பிரேதவிசாரணை அறிக்கைகளை வாங்கி பார்த்துவிட்டு சாட்சிகளுக்கு சம்மன் சார்வு செய்ததாக சொல்லுகிறார். அந்த

சம்மன்களில் சாட்சிகளின் பெயர், விலாசம் எழுதப்படவில்லை என்றால் சம்மனில் பெயர், விலாசம் எழுதமாட்டோம்.

இறந்துபோன பிரபு என்பவரது துண்டிக்கப்பட்ட தலையின் மீது மேற்கொள்ளப்பட்ட பிரேதவிசாரணையானது 15.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 16.00 மணிக்கு முடிக்கப்பட்டுள்ளது. அந்த நேரமானது பிரேதவிசாரணை அறிக்கையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரபுவின் தலையையும், உடலையும் சேர்த்து வைத்து மேற்கொள்ளப்பட்ட பிரேதவிசாரணை அறிக்கையில் பிரேதவிசாரணை நேரமானது திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

புகார் உள்ளிட்ட இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றாற்போல் பொய்யாக ஜோடனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3 ஆம் எதிரியானவர் நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து என்னால் கைது செய்யப்படவில்லை என்றாலும், 3 ஆம் எதிரி என்னிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த வழக்கு சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. 3 ஆம் எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**நேரம் மாலை 5.25 மணி.**

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.